**திருத்துறைப்பூண்டி நகராட்சி**

**இயல்பு கூட்ட நடவடிக்கைகள்**

**திருத்துறைப்பூண்டி நகர்மன்றத்தில் 31.08.2023 வியாழக் கிழமை நகர்மன்றத் தலைவர் அவர்களால் நடத்தப்பட்ட இயல்பு கூட்ட நடவடிக்கைகள்.**

**முன்னிலை : திருமதி.பா. கவிதா, M.Com.,**
**தலைவர்,**
**திருத்துறைப்பூண்டி நகர்மன்றம்**

| **பொருள் எண்** | **பொருள்கள் விபரம்** | **நகர்மன்றத் தீர்மானம்** | |
|---|---|---|---|
| | | **தீர்மானம் எண்** | **விபரம்** |
| **01** | நகராட்சி ஆணையர் அவர்களின் ஆகஸ்ட்-2023 மாதத்திற்கான நாட் குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் மற்றும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு:** மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.<br><br>**ந.க.எண்.77/2023/சி1** | **156** | **அலுவலக குறிப்பு பதிவு செய்யப்பட்டது** |
| **02** | திருத்துறைப்பூண்டி நகராட்சிக்கு மூலதன மான்ய நிதி 2023-24ன் (CGF-2023-24) கீழ் தொகை ரூ.150.00 இலட்சம் மதிப்பீட்டில் வார்டு எண்.22, முத்துப்பேட்டை ரோடு, அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் 2.50 இலட்சம் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி புதிதாக அமைக்கப்பட உள்ள இடத்தினை நேராய்வு செய்து மண் பரிசோதனை செய்து அதற்கான அறிக்கையினை சமர்பிக்கும்படி முதல்வர், துறைத் தலைவர், அண்ணா பொறியியல் கல்லூரி (இராஜாமடம்) பட்டுக்கோட்டை அவர்களை கேட்டுக் கொள்ளப்பட்டதன் அடிப்படையில் மேற்கண்ட பொறியியல் கல்லூரி நிர்வாகத்தினால் (1) போர்வெல் கட்டணம் ரூ.10,000/- (2) மண் பரிசோதனை மற்றும் அறிக்கை கட்டணம் ரூ.30,000/- மொத்தம் ரூ.40,000 (ரூபாய் நாற்பதாயிரம் மட்டும்) | **157** | **அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |

<table>
<tr>
<td></td>
<td>செலுத்தும்படி வரப்பெற்ற கடிதம் நகர்மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது. இதற்கான செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு :<br><br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. பணியின் அவசரம் அவசியம் கருதி நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று அண்ணா பொறியியல் கல்லூரிக்கு தொன வழங்கப்பட்ட இவ்வலுவலக நடவடிக்கைகளை மன்றம் அங்கீகரிக்கலாம்<br><u>ந.க.எண்.2157/2018/இ1</u></td>
<td></td>
<td></td>
</tr>
<tr>
<td>03</td>
<td>திருத்துறைப்பூண்டி நகராட்சிக்குட்பட்ட புதிய பேருந்து நிலையத்தில் உள்ள மழைநீர் வடிகால்களை சுத்தம் செய்தல், புதிய பேருந்து நிலையத்தில் பயன்படுத்த இயலாத நிலையில் உள்ள பழைய கட்டண கழிப்பிட கட்டிடத்தினை இடித்தல், இலவச சிறுநீர் கழிப்பிடத்தின் வடபுறம் பென்சிங் அமைத்தல் , சீனிவாசராவ் மணி மண்டப வளாகத்தை சுத்தம் செய்தல், கழுவமுள்ளி தெரு மயானம் மற்றும் கழிப்பிட அணுகு சாலையில் உள்ள முற்புதர்களை JCB இயந்திரம் மூலம் அகற்றும் செய்வதற்கு தொகை ரூ.1,46,000/- மதிப்பீட்டில் மேற்கொள்ளும் பணிகளுக்கு 25.04.2023 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்காணும் மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றன. வரப்பெற்றுள்ள மூன்று விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><br>
<table>
<tr><th>வ. எண்</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>விலைப் புள்ளி மதிப்பீடு</th><th>விலைப் புள்ளி தொகை ரூ.</th><th>விலைப் புள்ளி சதவீதம் குறைவு/ அதிகம்</th></tr>
<tr><td>1.</td><td>M/S.மங்கையர்க்கரசி கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், மடப்புரம்.</td><td>122099.25</td><td>126821.00</td><td>3.87% அதிகம்</td></tr>
</table>
</td>
<td>158</td>
<td>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td>
<table>
<tr><td>2.</td><td>திரு.எஸ்.பாலசுப்ரமணியன்,<br>ஒப்பந்ததாரர்,<br>திருத்துறைப்பூண்டி.</td><td rowspan="2"></td><td>122090.00</td><td>-0.01%<br>குறைவு</td></tr>
<tr><td>3.</td><td>திருமதி.எஸ்.விஜயகுமாரி,<br>ஒப்பந்ததாரர்,<br>திருத்துறைப்பூண்டி.</td><td>124380.00</td><td>1.87%<br>அதிகம்</td></tr>
</table>
அலுவலக குறிப்பு :<br><br>
1. வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட -0.01 சதவீதம் குறைவான தொகைக்கு விலைப்புள்ளி வழங்கியுள்ள வரிசை எண்.02ல் திரு.எஸ்.பாலசுப்ரமணியன் என்ற ஒப்பந்ததாரரின் விலைப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.<br><br>
2. பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதிப் பெற்று தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம்-(1920 பிரிவு 15) தற்போதைய சட்டம்-1998 பிரிவு 57(7) ன் கீழ் மேற்கொள்ளப்பட்ட இவ்வலுவலக நடவடிக்கைகளை மன்றம் அங்கீகரிக்கலாம்.<br><br>
<u>ந.க.எண். 871/2023/இ1</u>
</td>
<td></td>
<td></td>
</tr>
<tr>
<td>04</td>
<td>திருத்துறைப்பூண்டி நகராட்சியில் செயல்படுத்தப்பட்டு வரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சரின் காலை உணவுத் திட்டப் பணிகளுக்கும் மற்றும் திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கும் 200 கிலோ திறன் கொண்ட இரண்டு எலக்ட்ரானிக் தராசுகள் விநியோகம் செய்யும் பணிக்கு 08.08.2023 அன்று விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்காணும் மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றன. வரப்பெற்றுள்ள மூன்று விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது. மேலும், இதற்கான செலவினங்களை பொதுநிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி</td>
<td>159</td>
<td>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td>வேண்டப்படுகிறது.
<table>
<tr><th>வ. எண்</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>தராசுகளின் எண்ணிக்கை</th><th>விலைப் புள்ளி தொகை ரூ.</th></tr>
<tr><td>1.</td><td>M/S.மங்கையர்க்கரசி கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், மடப்புரம்.</td><td rowspan="3">இரண்டு</td><td>15600.00</td></tr>
<tr><td>2.</td><td>திரு.எஸ்.பாலசுப்ரமணியன்,<br>ஒப்பந்ததாரர்,<br>திருத்துறைப்பூண்டி.</td><td>16400.00</td></tr>
<tr><td>3.</td><td>திருமதி.எஸ்.விஜயகுமாரி,<br>ஒப்பந்ததாரர்,<br>திருத்துறைப்பூண்டி.</td><td>16000.00</td></tr>
</table>
அலுவலக குறிப்பு :<br>
1. வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைவான தொகை ரூ.15600.00/- விலைப்புள்ளி வழங்கியுள்ள வரிசை எண்.01ல் M/S.மங்கையர்க்கரசி கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், மடப்புரம் என்ற ஒப்பந்த நிறுவனத்தின் விலைப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.<br>
2. பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று மேற்கொள்ளப்பட்ட இவ்வலுவலக நடவடிக்கை களை மன்றம் அங்கீகரிக்கலாம்.<br>
<u>ந.க.எண். 710-1/2023/இ1</u></td>
<td></td>
<td></td>
</tr>
<tr>
<td>05</td>
<td>திருத்துறைப்பூண்டி நகராட்சியில் அலுவலக பயன்பாட்டிற்கு செயல்பட்டு வரும் பொலிரோ ஈப்பு வாகனத்தின் ( வாகன எண்.TN.50-R-1074 ) வாட்டர் பம்ப் பழுதாகியதை ஈப்பு வாகன ஒட்டுநர் திரு.மு.சிற்றரசன் அவர்களால் புதிய வாட்டர் பம்ப் வாங்கி பொருத்தப்பட்டதற்கான செலவினத் தொகை ரூ.4,960/- தனக்கு வழங்கும்படி அன்னாரிடமிருந்து வரப்பெற்ற கடிதம் மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது. மேலும், இதற்கான செலவினங்களை பொதுநிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.</td>
<td>160</td>
<td>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | **அலுவலக குறிப்பு :**<br>**1.** மன்றம் அனுமதி வழங்கலாம்<br>**2.** பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதிப் பெற்று மேற்கொள்ளப்பட்ட இவ்வலுவலக நடவடிக்கைகளை மன்றம் அங்கீகரிக்கலாம்.<br>**ந.க.எண். 2061/2023/இ1** | | |
| **06** | திருத்துறைப்பூண்டி நகராட்சிக்குச் சொந்தமான வார்டு எண்.05, (சர்வே எண்.132) புதிய பேருந்து நிலையத்தை நவீன முறையில் மேம்பாடு செய்வதற்கு கலைஞர் நகர்புற மேம்பாட்டுத் திட்டம் 2023-24ன் கீழ் கலைஞர் நகர்புற மேம்பாட்டுத் திட்ட நிதியின் தொகை ரூ.3.50 கோடியும், இத்திட்டப் பணிக்கு நகராட்சி பங்களிப்பு தொகை ரூ.3.50 கோடியும் சேர்த்து தொகை **ரூ.7.00 கோடி** மதிப்பீட்டில் மேம்பாடு செய்ய அரசாணை(4D) நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (SS&FC) துறை நாள் 18.08.2023ன்படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. வரப்பெற்ற அரசாணை நகர்மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு :** மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.<br>**ந.க.எண். 854/2023/இ1** | **161** | **அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |
| **07** | தஞ்சாவூர் நகராட்சிகள் நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் உத்தரவின்படி, திருச்சிராப்பள்ளி மற்றும் தஞ்சாவூர் மாவட்டத்திற்கு பல்வேறு திட்டப் பணிகளை திறந்து வைத்து விருதுகள் வழங்கும் அரசு விழாவிற்கு வருகை தரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை வரவேற்கும் நிகழ்வினையும் மற்றும் திருத்துறைப்பூண்டி நகராட்சிக்கு பல்வேறு திட்டப் பணிகள் மேற்கொள்ள தொகை ரூ.32.892 கோடி வழங்கிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் தினசரி | **162** | **அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |

<table>
<tr><td></td><td>நாளிதழ்களில் விளம்பரம் செய்யப்பட்டதற்கு கீழ்கண்ட நாளிதழ்களின் நிறுவனங்களிடமிருந்து பட்டியல் தொகைகள் வழங்கக் கேட்டு வரப்பெற்ற பட்டியல்கள் நகர்மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் பொருள் வைக்கப்படுகிறது.

| வரிசை எண். | நாளிதழின் பெயர் | நிறுவனத்தின் பெயர் | தொகை ரூ. |
|---|---|---|---|
| 1. | தினகரன் | Kal Publications (P) LTD Trichy | 48,300.00 |
| 2. | தமிழ் முரசு | Kal Publications (P) LTD Trichy | 15,000.30 |
| 3. | மாலை தமிழகம் | மாலை தமிழகம், சென்னை | 16,380.00 |
| 4. | ஈவ்னிங் தமிழ்நாடு | ஈவ்னிங் தமிழ்நாடு, சென்னை | 15,540.00 |
| 5. | தினந்தந்தி | தினந்தந்தி, தஞ்சாவூர் | 41475.00 |
| **கூடுதல்** | | | **136695.30** |

மேலும், வரிசை எண்.01 முதல் 05 வரையிலான நிறுவனங்களின் எதிரே உள்ள தொகையினை உரிய நிறுவனங்களுக்கு வழங்கவும், இதற்கான செலவினங்களை பொது நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண். 2236/2023/இ1**</td><td></td><td></td></tr>
<tr><td>08</td><td>இந்நகராட்சியில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தின் 2023-24ன்கீழ் (KNMT) மண் சாலையை தார் சாலையாக மேம்பாடு செய்ய 10 எண்ணிக்கை சாலைகள் 1.21 கி.மீ. மேற்கொள்ள திட்ட அனுமதி மற்றும் கண்காணிப்புக்குழு கூட்ட நடவடிக்கை நாள் 29.05.2023 மூலம் நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டு 30.06.2023ந் தேதியில் ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு 10.07.2023ந்</td><td>163</td><td>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td>தேதியில் இப்பணிக்கான வேலை உத்தரவு வழங்கப்பட்டது. இதில் கோட்டகம் (56மீ) மற்றும் ஆட்டூர் (90மீ) ஆகிய இரண்டு இடத்தில் 300 மீட்டர் ஏற்கனவே உள்ள பேவர் பிளாக் சாலையை கடந்து தார் சாலை அமைக்க வேண்டியுள்ளது. 20-வது வார்டு பொதுமக்கள் மற்றும் 16-வது வார்டு பொதுமக்கள் அவர்களின் கோரிக்கையின்பேரில் மேற்கண்டுள்ள இரண்டு சாலைகளை பேவர் பிளாக் சாலையாக மாற்றிக்கொள்ள நகர்மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு :<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. பேவர் பிளாக் சாலையை கடந்து தார் சாலை அமைப்பது சிரமம் என்பதாலும் இவற்றுடன் நீளம் 100 மீட்டருக்குள் உள்ளதாலும் இப்பணி பேவர் பிளாக் சாலையாக மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br><u>ந.க.எண். 1427/2023/இ1</u></td>
<td></td>
<td></td>
</tr>
<tr>
<td>09</td>
<td>இந்நகராட்சியின் பொதுசுகாதாரப் பிரிவில் பயன்படுத்தப்பட்டு வரும் வாகனம் எண் TN-50–AT-8955-க்கு டயர், டியூப்-4 மற்றும் பேட்டரி பழுதாகிவிட்டதால் அவசர அவசியம் கருதி உள்ளூர் விலைப்புள்ளி கோரியதில் வரப்பட்டுள்ள இரண்டு விலைப்புள்ளிகளின் விவரம் கீழ்க்ண்டுள்ளவாறு உள்ளது.
<table>
<tr><th>வ.எ.</th><th>விலைப்புள்ளிதாரரர் பெயர்/முகவரி</th><th>டயர், டியூப் மற்றும் பேட்டரி ஒன்றின் விலை ரூ.</th></tr>
<tr><td>1.</td><td>MVK நிறுவனம், 77,D.M.Court street, Thiruthuraioondi</td><td>7350/–</td></tr>
<tr><td>2.</td><td>Sri, SM-RM-Tyres, 80/B, South Main street, Thiruthuraipoondi</td><td>7500/-</td></tr>
</table></td>
<td>164</td>
<td>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | மேற்படி, வரப்பட்டுள்ள விலைப்புள்ளியில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள வரிசை எண் 1-ல் கண்டுள்ள MVK நிறுவனம், 77 D.M.Court street, Thiruthuraioondi என்ற நிறுவனத்தின் குறைந்த விலைப்புள்ளியினை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:**<br>**1.** மன்றம் அனுமதிக்கலாம்.<br>**2.** பொது சுகாதப்பிரிவு வாகனத்தின் (வாகனம் எண் TN-50–AT-8955) அவசர அவசியம் கருதி நகர் மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்ட இவ்வலுவலக நடவடிக்கையினை மன்றம் எற்கலாம்.<br><br>**(ந.க.எண்1632/2023/எச்1)** | | |
| **10** | இந்நகராட்சியின் பொதுசுகாதாரப் பிரிவில் இயங்கிவரும் வாகன எண்TN-50–L-7339-குப்பை லாரிக்கு தகுதிச் சான்று (FC) 17.05.2023 அன்றுடன் முடிவடைவதால், மேற்படி வாகனத்திற்கு தகுதி சான்று பெறுவதற்கான பழுதுகள் நீக்கம் செய்ய ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.1,10,000/- க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு:**<br>**1.** மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>**2.** பொது சகாதப்பிரிவு வாகனத்தின் (வாகனம் எண் TN-50–L-7339) அவசர அவசியம் கருதி நகர் மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்ட இவ்வலுவலக | **165** | **அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |

| | | | |
|---|---|---|---|
| | நடவடிக்கையினை மன்றம் எற்கலாம்.<br>**(ந.க.எண்1309/2023/எச்1)** | | |
| **11** | நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், தஞ்சாவூர் அவர்கள் 20.07.2023 அன்றைய தினம் காணொலி மூலம் நடத்திய ஆய்வுக் கூட்டத்தில் திருத்துறைப்பூண்டி நகராட்சியில் தினசரி சேகரம் ஆகும் குப்பைகளை Quantification செய்து உடன் அறிக்கை அனுப்ப அறிவுறத்தப்பட்டது. அதன்படி மேற்படி பொதுசுகாதார பிரிவு பணியின் அவசர அவசியம் கருதி Green link Analytical and research laboratory India Private Ltd. Coimbatore என்ற நிறுவனத்தின் மூலம் இந்நகராட்சியில் ஒருநாள் சேகரம் செய்த குப்பைகளை Quantification செய்த வகையில் மேற்படி நிறுவனத்திற்கு ரூ.12,685/- செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு:**<br>**1.** மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>**2.** Green link Analytical and research laboratory India Private Ltd. Coimbatore என்ற நிறுவனத்தின் மூலம் இந்நகராட்சியில் ஒருநாள் சேகரம் செய்த குப்பைகளை Quantification செய்த வகையில், பொதுசுகாதார பிரிவின் அவசர அவசியம் கருதி நகர் மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கிய இவ்வலுவலக நடவடிக்கையினை மன்றம் எற்கலாம்.<br>**(ந.க.எண்2065/2023/எச்1)** | **166** | **அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |

| | | | |
|---|---|---|---|
| **12** | நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், தஞ்சாவூர் அவர்கள் 20.07.2023 அன்றைய தினம் காணொலி மூலம் நடத்திய ஆய்வுக் கூட்டத்தில் திருத்துறைப்பூண்டி நகராட்சியில் தினசரி சேகரம் ஆகும் குப்பைகளை Characterization செய்து உடன் அறிக்கை அனுப்ப அறிவுறத்தப்பட்டது. அதன்படி மேற்படி பொதுசுகாதார 167பிரிவு பணியின் அவசர அவசியம் கருதி Periyar Consultancy Services (PECS) CIVIL Engineering division(NABL ACCREDITED). Thanjavur என்ற நிறுவனத்தின் மூலம் இந்நகராட்சியில் ஒருநாள் சேகரம் செய்த குப்பைகளை Characterization செய்த வகையில் மேற்படி நிறுவனத்திற்கு ரூ.1,770/- செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு:**<br><br>**1.** மன்றம் அனுமதிக்கலாம்.<br>**2.** Periyar Consultancy Services (PECS) CIVIL Engineering division(NABL ACCREDITED). Thanjavur என்ற நிறுவனத்தின் மூலம் இந்நகராட்சியில் ஒருநாள் சேகரம் செய்த குப்பைகளை Characterization செய்த வகையில், பொதுசுகாதார பிரிவின் அவசர அவசியம் கருதி நகர் மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கிய இவ்வலுவலக நடவடிக்கையினை மன்றம் எற்கலாம்.<br>**(ந.க.எண்2063/2023/எச்1)** | **167** | **அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |

<table>
<tr>
<td>13</td>
<td>
இந்நகராட்சியின் பொதுசுகாதாரப் பிரிவில் இயங்கி வரும் வாகனம் எண் TN-50–AT-8955-க்கு (TATA ACE) பழுதுகள் நீக்கம் செய்து தகுதிச் சான்று பெறுவதற்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு கீழ்க்கண்ட நான்கு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.
<table>
<tr><th>வ.எ.</th><th>விலைப்புள்ளிதாரரர் பெயர்/முகவரி</th><th>டயர், டியூப் மற்றும் பேட்டரி ஒன்றின் விலை ரூ.</th></tr>
<tr><td>1.</td><td>சிவா இன்ஜினியரிங் ஒர்க்ஸ், 16/11.சிங்களாந்திரோடு, திருத்துறைப்பூண்டி.</td><td>88,500/-</td></tr>
<tr><td>2.</td><td>தமிழ்நாடு அக்ரோ சர்வீஸ் செண்டர், 1ஏ/12. பைபாஸ் ரோடு, விஜயபுரம், திருவாரூர்-</td><td>89,851/-</td></tr>
<tr><td>3.</td><td>அன்னை சத்யா இன்ஜினியரிங் ஒர்க்ஸ்,13.ராம்கே ரோடு, சங்கம் தியேட்டர் அருகில், திருவாரூர்.</td><td>91,000/-</td></tr>
<tr><td>4.</td><td>ஜெயராஜ் அண்ட் கம்பெனி, நாஞ்சிக்கோட்டை ரோடு, தஞ்சாவூர்</td><td>97,940/-</td></tr>
</table>
மேற்படி, வரப்பட்டுள்ள விலைப்புள்ளியில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள வரிசை எண் 1-ல் கண்டுள்ள சிவா இன்ஜினியரிங் ஒர்க்ஸ், 16/11.சிங்களாந்தி ரோடு, திருத்துறைப்பூண்டி என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளியினை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>
அலுவலக குறிப்பு:<br>
1. மன்றம் அனுமதிக்கலாம்.
</td>
<td>168</td>
<td>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | **2.** பொது சுகாதப்பிரிவு வாகனத்தின் (வாகனம் எண் TN-50–AT-8955) (TATA ACE) தகுதிச்சான்று பெற வேண்டியதின் அவசர அவசியம் கருதி நகர் மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்ட இவ்வலுவலக நடவடிக்கையினை மன்றம் எற்கலாம்.<br>**(ந.க.எண் 2366/2023/எச்1)** | | |
| **14** | நகர்மன்ற கூட்ட அறிக்கை மற்றும் அலுவலக பணிகள் அறிவிப்புகள் தயார் செய்வதற்கு வெளியிலிருந்து ஜெராக்ஸ் எடுக்கப்பட்டு வருகிறது. தற்போது இந்நகராட்சியில் ஜெராக்ஸ் மெஷின் இல்லாத காரணத்தால் அவசர அவசியம் கருதி நகர்மன்றக் கூட்ட அறிக்கை தயார் செய்வதற்கு மற்ற பணிகளுக்கும் (ஜூலை-2023 முதல் டிசம்பர்-2023 வரை உள்ள மாதங்களுக்கு ஜெராக்ஸ் எடுக்க ஆகும் உத்தேச செலவினமாக ரூ.50,000/-க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு:**<br>**1.** மன்றம் அனுமதிக்கலாம்.<br>**2.** அவசர அவசியம் கருதி நகர் மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்ட இவ்வலுவலக நடவடிக்கையினை மன்றம் எற்கலாம்.<br>**(ந.க.எண் 2066/2023/சி1)** | **115** | **அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |

ஓம்/பா.கவிதா,
தலைவர்,
திருத்துறைப்பூண்டி நகர்மன்றம்.

/உண்மை நகல்/

**திருத்துறைப்பூண்டி நகராட்சி**

**அவசரக் கூட்ட நடவடிக்கைகள்**

**திருத்துறைப்பூண்டி நகர்மன்றத்தில் 28.07.2023 வெள்ளிக் கிழமை நண்பகல் 12.00 மணிக்கு நகர்மன்றத் தலைவர் அவர்களால் நடத்தப்பட்ட அவசரக் கூட்ட நடவடிக்கைகள்.**

**முன்னிலை : திருமதி.பா. கவிதா, M.Com.,**

தலைவர்,

திருத்துறைப்பூண்டி நகர்மன்றம்

| பொருள் எண் | பொருள்கள் விபரம் | நகர்மன்றத் தீர்மானம் | |
|---|---|---|---|
| | | தீர்மானம் எண் | விபரம் |
| 01 | திருத்துறைப்பூண்டி நகராட்சியின் 2021-22ஆம் ஆண்டிற்கான தணிக்கை முடிவுபெற்று திருவாரூர் உள்ளாட்சி நிதி தணிக்கை துறை உதவி இயக்குநர் அவர்களிடமிருந்து தணிக்கை அறிக்கைகள் மற்றும் தணிக்கை குறிப்புகள் வரப்பெற்றது, மேற்படி தணிக்கை அறிக்கைகள் மற்றும் தணிக்கை குறிப்புகள் அவற்றிற்குரிய பதில்கள் தொடர்புடைய பிரிவு எழுத்தர்கள் மூலம் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு :**<br><br>2021-22ஆம் ஆண்டின் தணிக்கை அறிக்கை மற்றும் தணிக்கை குறிப்புகள், அவற்றிற்குரிய பதில்களை மன்றம் பார்வையிட்டு | 151 | **அலுவலக குறிப்பு பதிவு செய்யப்பட்டது** |

| | | | |
|---|---|---|---|
| | பதிவு செய்யலாம்.<br><br>**<u>ந.க.எண் 78/2006/பி2</u>** | | |
| **02** | திருத்துறைப்பூண்டி நகராட்சியின் 2022-23ஆம் ஆண்டிற்கான நிர்வாக அறிக்கை தயார் செய்வதற்கு ஆகும் உத்தேச செலவினத்தொகை ரூ.10,000/=க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு :**<br>1) மன்றம் அனுமதிக்கலாம்,<br>2) நிர்வாக அறிக்கை தயார் செய்வதற்கு ஆகும் செலவினத்தொகையினை அந்நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>**<u>ந.க.எண் 2032/2023/சி1</u>** | **152** | **அலுவலக அனுமதிக்கப் பட்டது** |
| **03** | திருத்துறைப்பூண்டி நகராட்சியின் 24 வார்டுகளிலும் உள்ள பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் தடையின்றி வழங்கும் வகையில் நகராட்சி பராமரிப்பில் இயங்கி வரும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளின் டெலிவரி பைப்புகள், மினி பவர் பம்ப் ரூம் பைப்புகள், கொள்ளிடம் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளின் டெலிவரி பைப்புகள், கைபம்புகள் போன்றவற்றை புதிதாக மாற்றுதல் மற்றும் பழுது சரிப்பார்த்தல் ஆகிய பணிகளுக்கு 2023-24 ஆம் ஆண்டிற்கு தேவையான குடிநீர் குழாய்கள் மற்றும் அதன் சார்ந்த உபகரணங்களை வெளிச்சந்தையிலிருந்து தொகை ரூ.3,00,000/- மதிப்பீட்டில் கொள்முதல் செய்வதற்கும், இதற்கான செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம். | **153** | **அலுவலக அனுமதிக்கப் பட்டது** |

| | | | |
|---|---|---|---|
| | **ந.க.எண். 1287/2023/இ1** | | |
| **04** | திருத்துறைப்பூண்டி நகராட்சி பொறியியல் பிரிவு குடிநீர் பணிகளுக்கு நகராட்சி பராமரிப்பில் இயங்கி வரும் புதிய பேருந்து நிலையத்தில் அமைந்துள்ள கொள்ளிடம் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மற்றும் 6 எண்ணிக்கையிலான மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளிலிருந்து தினசரி பொதுமக்களுக்கு பாதுகாப்பான சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இந்நிலையில் குடிநீர் விநியோகத்திற்கு தேவையான சோடியம் ஹைபோகுளோரைடு போதிய அளவில் இருப்பு இல்லாததால் 2023-24 ஆம் ஆண்டிற்கு **25000 லிட்டர் சோடியம் ஹைபோகுளோரைடு** வெளிச்சந்தையிலிருந்து தொகை **ரூ.3,50,000/-** மதிப்பீட்டில் கொள்முதல் செய்வதற்கும், இதற்கான செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம்.<br><br>**ந.க.எண். 2064 /2023/இ1** | **154** | **அலுவலக அனுமதிக்கப் பட்டது** |
| **05** | திருத்துறைப்பூண்டி நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தமிழ்நாடு நகர்புற வேலை வாய்ப்புத் திட்டம் (TNUES) 2022-23ன் கீழ் **தொகை ரூ.150.23** மதிப்பீட்டில் ஒன்பது பணிகள் மேற்கொள்வதற்கு சென்னை, நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.2300/2022/யுபிஏ நாள். 19.05.2023 ஆம் தேதிய கடிதத்தில் உரிய நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதுதன் அடிப்படையில் இந்நகர்மன்ற தீர்மானம் எண்.95 நாள்.30.05.2023-ல் பணிகள் மேற்கொள்வதற்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இந்நிலையில் சென்னை, நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.2300- | **155** | **அலுவலக அனுமதிக்கப் பட்டது** |

1/2022/யுபிஏ நாள். 19.06.2023 ஆம் தேதிய கடிதத்தில் கீழ்கண்ட பணிகளுக்கு **தொகை ரூ.145.09** மதிப்பீட்டில் ஒன்பது பணிகள் மேற்கொள்ள திருத்திய நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி கடிதத்தினை நகர்மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது. மேலும், இத்திட்டதின் மூலப்பொருட்களுக்கான **(ஜி.எஸ்.டி உள்பட)** தொகை ரூ.1768055/-க்கு உரிய மதிப்பீடுகள் தயார் செய்து ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

| SL No | Name of Work | No of Labour | Labour Cost | Material Cost | Gst 18% Material | LWF 1% | Appraised Amount (in Rs) |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | கோன்றிகுளம், உப்புக்குளம், சேர்வராயன் குளம், தச்சன் குளம், பிள்ளையார் குளம் மற்றும் அரசன் குளம் ஆகியவற்றிற்கு கம்பி வேலி அமைக்கும் பணி | 3962 | 1354916 | 318599 | 57348 | 13549 | 1744412 |
| 2. | நந்தவனக்குளம், கழுவமுள்ளிக்குளம், பிடாரிக் குளம், அட்டை குளம், புளியங்குளம் மற்றும் கவரைக் குளம் ஆகிய வற்றிற்கு கம்பி வேலி அமைக்கும் பணி | 3799 | 1299121 | 305677 | 55022 | 12991 | 1672811 |
| 3. | தாதன் குளம், குருமாரி யம்மன் குளம், அரியலூர் ஆதிதிராவிடர் தெரு குளம், நெட்டோடைக் குளம், முதலியார் குளம், பாம்பாலம் மன் கோவில் குளம், பள்ளிக்கூடக் குளம், மற்றும் ஆதித்தன் குளம் ஆகிய வற்றிற்கு கம்பி வேலி அமைக்கும் பணி | 4180 | 1429483 | 345840 | 62251 | 14296 | 1851869 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 4. | செங்கமலக்குளம், சுப்பன் குட்டை, குட்டைக் குளம், குட்டை, மற்றும் புதுக்குளம், ஆகியவற்றிற்கு கம்பி வேலி அமைக்கும் பணி | 3157 | 1079751 | 262478 | 47246 | 10798 | 1400272 |
| 5. | திருவாசல் குளம், பாகை குளம், மற்றும் அரியலூர் குளம், ஆகியவற்றிற்கு கம்பி வேலி அமைக்கும் பணி | 3464 | 11848697 | 265758 | 47836 | 11847 | 1510136 |
| 6. | அரியலூர் ஆதிதிராவிடர் தெரு குளம், திருவாசல் குளம், குட்டை & சுப்பன் குட்டை ஆகியவற்றிற்கு தூர்வாரும் பணி | 5449 | 1863527 | 0 | 0 | 18635 | 1882162 |
| 7. | அரியலூர் குளம், செங்கமலக் குளம் மற்றும் குட்டை குளம் ஆகியவற்றிற்கு தூர்வாரும் பணி | 5751 | 1966615 | 0 | 0 | 19666 | 1986281 |
| 8. | பாகை குளத்தை தூர்வாரும் பணி | 5566 | 1903176 | 0 | 0 | 19032 | 1922208 |
| 9. | கவரை குளத்தினை MCC-ன் 365 நாட்களும் இயக்குதல் மற்றும் பராமரித்தல் பணி. | 1560 | 533520 | 0 | 0 | 5336 | 538855 |
| கூடுதல் | | | 36888 | 23278806 | 1498352 | 126150 | 14509006 |

| | | | |
|---|---|---|---|
| | **அலுவலக குறிப்பு :**<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. இந்நகர்மன்ற தீர்மானம் எண்.95 நாள்.30.05.2023ன்படி ஒப்புதல் வழங்கப் பட்டதனை ரத்து செய்யலாம்<br><br>**ந.க.எண்.1469 /2023/இ1** | | |

ஒம்/பா.கவிதா,
தலைவர்,
திருத்துறைப்பூண்டி நகர்மன்றம்.

/உண்மை நகல்/